# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி – 620 024.

முனைவர் க.கோபிநாத்
பதிவாளர் (பொ)

தொலைபேசி : 0431-2407092
தொலைநகலி : 0431-2407045
வலைதளம் : www.bdu.ac.in

கடித எண். 48740/டி1/2020 நாள்: 28.12.2020

பெறுநர்

முதல்வர்,
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக்
கல்லூரிகள் / ஒப்புதல் பெற்ற நிறுவனங்கள்

அய்யா / அம்மா,

பொருள்: இணைவு – 2021-2022 ஆம் கல்வியாண்டில் புதிய / கூடுதல் பாடவகுப்புகள் / மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு கருத்துருக்கள் அனுப்பக் கோருதல் – தொடர்பாக

பார்வை: துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 22.12.2020

---------

பாரதிதாசன் பல்கலைக்கழக நிறுவனச் சட்டத்தின்படி (Statutes), 2021-2022ஆம் கல்வியாண்டில் புதிய பாடவகுப்புகள் (New Programmes) துவங்குவதற்கும், ஏற்கனவே நடைபெற்றுவரும் பாடவகுப்புகளுக்கு கூடுதல் பிரிவுகள் (Additional Sections) துவங்குவதற்கும் மற்றும் நடைபெற்றுவரும் பாடவகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கையினை உயர்த்துவதற்கும் [Revision of Intake (within the maximum sanctioned strength)] விருப்பமுள்ள இணைவுப் பெற்றக் கல்லூரிகள் / ஒப்புதல் பெற்ற நிறுவனங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து, *அரசு கல்லூரிகளைத் தவிர பிற கல்லூரிகள்* ஒவ்வொரு பாடவகுப்பிற்கும் விண்ணப்பக்கட்டணமாக ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மற்றும் **GST 18%** சேர்த்து வங்கி வரைவோலையுடன் **(DEMAND DRAFT)**, **29.01.2021** முதல் *இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.*

மேலும் பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் விண்ணப்பக் கட்டணம் இணைக்கப்படாத கருத்துருக்கள் பல்கலைக்கழகத்தால் பரிசீலனைக்கு ஏற்க இயலாது எனவும், கல்லூரி முதல்வர்கள் பின்வரும் நெறிமுறைகளைக் கடைபிடிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

...2

## NEW PROGRAMME / ADDITIONAL SECTION / REVISION OF INTAKE:

- பல்கலைக்கழக நிறுவனச் சட்டத்தின்படி [பகுதி XII இனம் எண்.23(a) (I to VIII)] கல்லூரியினைப் பற்றிய முழு விவரங்களை அக்கல்லூரி நிர்வாகம் விண்ணப்பத்தில் தெரிவிக்கவேண்டும். மேலும், பல்கலைக்கழக நிறுவனச் சட்டத்தின்படி பகுதி XII - இணைப்பு III ன்படி கல்லூரியில் உள்ள வகுப்பறை, ஆய்வுக்கூடம் மற்றும் நூலக வசதிகள் ஆகியவற்றைக் கல்லூரி நிர்வாகம் ஏற்படுத்த வேண்டும்.

- கல்லூரிகளில் M.C.A. பாட வகுப்புகள் புதியதாக / கூடுதல் பாடப்பிரிவு துவங்குவதற்கு டெல்லி, அகில இந்தியத் தொழில்நுட்பக்குழுமத்தின் (AICTE, New Delhi) அனுமதி ஆணையுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

- கல்லூரிகளில் துவங்கப்பட இருக்கும் பாடத்திட்டம் பல்கலைக்கழக எல்லைக்குட்பட்ட கல்லூரிகளில் நடத்தப்படாத புதிய பாடதிட்டமாக இருக்குமெனில் அதற்கான வரைவுப் பாடத்திட்டத்தினை **(under Choice Based Credit System and as per the UGC norms)** விண்ணப்பத்துடன் இணைத்து பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் பாடத்திட்ட வளர்ச்சிக் குழும இயக்குநர் **(Director CCCD)** அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

- கல்லூரியில் புதிய முதுநிலை பாடவகுப்புகள் துவங்க இருப்பின் அதன் தொடர்புடைய இளநிலை பாடவகுப்புகள் நடைபெற வேண்டும். மேலும், தொடர்புடைய இளநிலை பாடவகுப்புகளில் ஓர் அணி மாணவர்கள் பயின்று வெளியேறியிருக்க வேண்டும்.

- அரசுக் கல்லூரிகளில் புதிய பாடவகுப்பு மற்றும் கூடுதல் பிரிவு துவங்குவதற்கு தமிழ்நாடு அரசாணை பெற்று அக்கடித நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

- கல்லூரிகளில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கு மாணவர் எண்ணிக்கை பல்கலைக்கழகத்தால் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| Programmes | Sanctioned Intake |
|---|---|
| UG Science (Lab oriented) | 40 |
| UG Science ( Non Lab oriented & Arts) | 60 |
| PG Science (Lab oriented) | 25 |
| PG Science ( Non Lab oriented & Arts) | 35 |
| MBA/MCA/M.Sc.I.T. & M.Sc.Computer Science | 60 |

*மேற்கண்ட அட்டவணையில் அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கு மேல் மாணவர்கள் சேர்க்கை செய்ய வேண்டியிருப்பின் கூடுதல் பிரிவிற்கு பல்கலைக்கழகத்திற்கு உரிய கட்டணத்துடனும் காலக்கெடுவிற்குள்ளும் விண்ணப்பித்து இணைவு பெற்றுக் கொள்ள வேண்டும்.*

...3.

➢ கீழ்க்காணும் அட்டவணையின்படி தங்களது கருத்துருக்களை அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| *Sl. No.* | *Particulars* | *Last date for submission of application* | *Last date for submission of application with late fee (விண்ணப்பக் கட்டணம் மற்றும் தாமதக் கட்டணத்துடன்)* |
|---|---|---|---|
| 01. | For Starting New Programme(s) **(U.G. & P.G.)** | **01.03.2021** | **17.03.2021 with late fee of Rs.10,000/- + GST 18% (per course)** |
| 02. | For Starting M.Phil., / P.G. Diploma / Diploma / Certificate Programme(s) | **31.03.2021** | **15.04.2021 with late fee of Rs.5,000/- + GST 18% (per course)** |
| 03. | For Starting **Additional Section(s)** / **Revision of Intake** in the existing Programme | UG Programmes **28.05.2021**<br>PG Programme: **15.06.2021** | **30.06.2021 with late fee of Rs.10,000/- + GST 18% (per course)**<br>**19.07.2021 with late fee of Rs.10,000/- + GST 18% (per course)** |

கல்லூரிகளால் அனுப்பப்படும் கருத்துருக்களில் அக்கல்லூரியின் முதல்வர் மற்றும் தலைவர் / செயலாளர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்

கல்லூரிகளுக்கு ஒவ்வொரு கல்வியாண்டிலும், சான்றிதழ், பட்டய, முதுநிலைப் பட்டய, கூடுதல் பிரிவுகள், ஆய்வியல் நிறைஞர் மற்றும் ஆய்வியல் அறிஞர் வகுப்புகள் நீங்கலாக, அதிகபட்சமாக ஐந்து (இளநிலை மற்றும் முதுநிலை) பாடவகுப்புகளுக்கு மட்டும் பல்கலைக்கழகத்தால் இணைவு வழங்கப்படும்.

2020-2021-ஆம் கல்வியாண்டில் புதிய பாடவகுப்பு தொடங்குவதற்கு தற்காலிக இணைவாணை பெறப்பட்டிருக்கும் பட்சத்தில், அப்புதிய பாடவகுப்புகளுக்கான மறு ஆய்வு அறிக்கை பெறப்பட்ட கல்லூரிகளுக்கு மட்டும் 2021-2022-ஆம் கல்வியாண்டிற்கு பெறப்படும் புதிய பாடவகுப்பிற்கான விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

புதிய பாடவகுப்புகள், கூடுதல் பாட வகுப்புகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்படும் ஆய்வுக்குழு கல்லூரியை ஆய்வு செய்து அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் 2021-2022 கல்வியாண்டிற்கான தற்காலிக இணைவு வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

புதிய வகுப்பு / கூடுதல் வகுப்பு தொடங்கக்கோரும் விண்ணப்பம் மற்றும் கருத்துரு (Proposal) அந்தந்த கல்வியாண்டிற்கு மட்டுமே பொருந்தும்.

ஒரு புதிய வகுப்பு / கூடுதல் வகுப்பு தொடங்க ஆய்வுக்குழு தனது ஆய்வு அறிக்கையினை அளித்த பின்னர் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இணைவுக்கட்டணத்தினை செலுத்தி இணைவாணை பெற்றுக்கொள்ளாத நிலையில், அடுத்த கல்வியாண்டில் மீண்டும் இதே ஆய்வறிக்கையின் அடிப்படையில் இணைவாணை வழங்க இயலாது. தேவைப்படின் புதிதாக விண்ணப்பக்கட்டணம் செலுத்தி புதிதாக கருத்துருவினை (Proposal) அனுப்பி விண்ணப்பிக்க வேண்டும்.

பல்கலைக்கழக இணைவு ஆணை பெறாமல் எந்த ஒரு பாடவகுப்பும் நடத்தக்கூடாது என்பதையும் மீறி நடத்தப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

புதிய பாடவகுப்பு, கூடுதல் பாடவகுப்பு, மாணவர்களின் எண்ணிக்கை உயர்த்தல் மற்றும் தற்காலிக நீட்டிப்பாணை தொடர்பான கட்டணங்களை உரிய GST 18% உடன் இனி வருங்காலங்களில் வங்கி வரைவோலையாக **(DEMAND DRAFT Only)** மட்டும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்புகளோடு இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு உடன் ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்பு: படிவ வடிவம்

பதிவாளர் (பொ.)

**2021-2022**

# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

## திருச்சிராப்பள்ளி – 620 024

புதிய வகுப்பு **(New Programme)** / கூடுதல் பிரிவு **(Additional Section)** துவங்குவதற்கு மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பாடவகுப்புகளில் (அனுமதிக்கப்பட்ட இடங்களுக்குள்) மாணவர் எண்ணிக்கையினை உயர்த்துவதற்கான **[Revision of Intake (within the maximum sanctioned strength)]** விண்ணப்பம்

01. கல்லூரியின் பெயர் மற்றும் முகவரி :
02. கல்லூரி முதல்வரின் பெயர் மற்றும் தொலைபேசி / கைபேசி எண் :
03. நிர்வாகத்தின் தன்மை (அரசு கல்லூரி / உதவிபெறும் கல்லூரி / சுயநிதிக் கல்லூரி) :
04. துவங்கவிருக்கும் புதிய வகுப்பின் பெயர் **(New Programme)** :
    *(if the college wants to start New P.G. Programme the respective departments should have at-least three faculty members with Ph.D. qualifications, in order to become eligible for affiliation of P.G. Programme and the necessary evidence should be enclosed).*
05. தற்போது துவங்கவிருக்கும் கூடுதல் பாடப்பிரிவின் பெயர் **(New Additional Section)** மற்றும் அப்பாடப்பிரிவின் விவரம் :

| வ.எண் | பாடத்தின் பெயர் | தற்காலிக / நிரந்தர பாடப்பிரிவிற்கு இணைவு பெற்ற விவரம். | | | | கூடுதல் பாடப்பிரிவு -I இணைவு பெற்ற விவரம் | | | | கூடுதல் பாடப்பிரிவு -II இணைவு பெற்ற விவரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | இணைவுபெற்ற கல்வியாண்டு | ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை | மாணவர் சேர்க்கை | | இணைவு பெற்ற | ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை | மாணவர் சேர்க்கை | | இணைவு பெற்ற கல்வியாண்டு | ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை | மாணவர் சேர்க்கை | |
| | | | | 2019-2020 | 2020-2021 | | | 2019-2020 | 2020-2021 | | | 2019-2020 | 2020-2021 |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

06. பல்கலைக்கழக இணைவு பெற்று கல்லூரியில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாடவகுப்பில் (அனுமதிக்கப்பட்ட இடங்களுக்குள்) மாணவர் எண்ணிக்கையினை உயர்த்துவதற்கான [Revision of Intake (within the maximum sanctioned strength)] விவரங்கள்:

| வ. எண் | பாடவகுப்பின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | தற்காலிக இணைவு பெற்ற கல்வியாண்டு |
|---|---|---|---|
| | | | |
| | | | |

07 பல்கலைக்கழக தற்காலிக இணைவு பெற்று கல்லூரியில் நடைபெற்று வரும் பாடவகுப்புகளின் விவரங்கள் (இளநிலை / முதுநிலை / பட்டய / சான்றிதழ் / ஆய்வியல் நிறைஞர் / ஆய்வியல் அறிஞர்)

| வ. எண் | பாடவகுப்பின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | தற்காலிக இணைவு பெற்ற வருடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

08. பல்கலைக்கழக நிரந்தர இணைவு பெற்று கல்லூரியில் நடைபெற்று வரும் பாடவகுப்புகளின் விவரங்கள் (இளநிலை / முதுநிலை / பட்டய / சான்றிதழ் / ஆய்வியல் நிறைஞர் / ஆய்வியல் அறிஞர்)

| வ. எண் | பாடவகுப்பின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | நிரந்தர இணைவு பெற்ற வருடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

09. துவங்கவிருக்கும் பாட வகுப்பின் அவசியம் :

10. துவங்கவிருக்கும் புதிய வகுப்பு ஏற்கனவே அருகில் உள்ள கல்லூரிகளில் நடைபெறுகின்றனவா? ஆம் எனில் அதன் விவரம் :

11. (அ) கல்லூரியில் நடைபெற்றுவரும் பாட வகுப்புகளுக்கு பல்கலைக்கழக இணைவின் போது விதிக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளதா? :

(ஆ) இல்லையெனில், நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளின் விவரங்கள் :

## நிலங்கள் / கட்டிடங்கள் :

(அ) அரசு ஆணையில் குறிப்பிட்டுள்ள இடத்தில் நிரந்தரக் கட்டிடத்தில் கல்லூரி இயங்கி வருகின்றதா? :

(ஆ) புதிய வகுப்புத் துவங்குவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் தற்போது உள்ள கட்டிடத்தில் உள்ளனவா? :

(இ) அவ்வாறு இல்லையெனில் புதிய பாட வகுப்புத் துவங்குவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஏற்பாடு கல்லூரி நிர்வாகத்தால் செய்யப்பட்டுள்ள விவரம் :

(ஈ) மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கு என தனித்தனி கழிவறை வசதிகள் செய்யப்பட்டுள்ள விவரம் :

(உ) கல்லூரித் துவங்கப்பட்டபொழுது இருந்த நிலங்களின் மொத்த அளவு / அதன் மதிப்பு விவரங்கள்

(ஊ) கல்லூரிக்காக மேலும் நிலங்கள் வாங்கப்பட்டிருப்பின் அவற்றின் விவரம் :

12. துவங்கவிருக்கும் புதிய பாட வகுப்பிற்கு கல்லூரி நிர்வாகம் கீழ்கண்ட இனங்களுக்கு ஏற்பாடு செய்துள்ள விவரங்கள் :

| வ. எண் | விவரம் | தேவையான வசதிகளின் உத்தேச மதிப்பீடு | கல்லூரி நிர்வாகத்தால் அதற்காக ஒதுக்கப்பட்டத் தொகை |
|---|---|---|---|
| அ. | விடுதி | | |
| ஆ. | ஆய்வகக்கூடக் கட்டிடங்கள் | | |
| இ. | அறைகலன்கள் | | |
| ஈ. | ஆய்வகச் சாதனங்கள் | | |
| உ. | நூலகத்திற்கான புத்தகங்கள் / இதழ்கள் | | |
| ஊ. | மற்றவைகள் (கருவிகள் மற்றும் உபகரணங்கள்) | | |

13. துவங்கவிருக்கும் புதிய பாட வகுப்பிற்குத் தேவையான கூடுதல் ஆசிரியர்களின் விவரங்கள் (கல்லூரியில் நடைபெற்றுவரும் இதர பாட வகுப்புகளையும் சேர்த்து ஒட்டு மொத்த பணிப்பளுவினை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்) :

14. கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படுகின்றதா? :

15. அரசுக் கல்லூரியாக இருப்பின், இப்புதிய பாடவகுப்புத் துவங்குவதற்கு தமிழக அரசு ஆணை விவரம்

16. இப்புதிய பாட வகுப்பிற்கு மாணவர்களிடம் வசூலிக்கவிருக்கும் கட்டண விவரம்

17. விண்ணப்பக் கட்டணம் ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மற்றும் **GST 18%** உடன் வங்கி வரைவோலை வாயிலாகச் செலுத்தியதற்கான **(DEMAND DRAFT ONLY)** எண் மற்றும் நாள்

18. மற்ற விவரங்கள் (ஏதாகிலும்)

## உறுதிமொழி

2021-2022-ஆம் கல்வியாண்டில் துவங்கவிருக்கும் புதிய பாடவகுப்பிற்கு பல்கலைக்கழக இணைவு பெறாமல் புதிய பாடவகுப்புகள் துவங்கவோ அல்லது பல்கலைக்கழக இணைவு ஆணையை எதிர்நோக்கி மாணவர்களை சேர்க்கை செய்வது போன்ற செயல்களை செய்யமாட்டேன் எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் உண்மை என்றும் உறுதி கூறுகிறேன்.

அரசு கல்லூரிகளில் துவங்க உள்ள புதிய பாடவகுப்புகளுக்குத் தேவையான உதவிகளைப் பெறுவதற்காகக் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து முன் அனுமதி பெறப்பட்ட கடித நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

செயலாளர் / நிர்வாகக்குழு

முதல்வர்